பெற்று இருக்கிறது. இப்படிப் பல்வேறு பிரச்சினைகளிலே முன்னணியிலே இருக்கின்ற இந்த மாநிலம் மேலும் மேலும் சிறப்புற்று வளர்வதற்கு வழிவகைகள் செய்கின்ற வகையிலேதான் இப்படிப்பட்ட தன்மைகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு நல்ல ஆதரவும், ஒத்துழைப்பும் தொடர்ந்து தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை ஆதரிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

6. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1994-95, முன் மொழிதல் (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1994–95*ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

Message

"In pursuance of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Channa Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 1994-95."

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95-பொது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994–95*ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1994–95* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய *3–11–1994* தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் *1994–95* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம், வெட்டுத் தீர்மானம் எண் 26. திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரம்பிகுளம்--ஆழியாறு திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,56,41,000—ல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் கொடுத்த ஏனைய உறுப்பினர்கள், அவையில் இல்லாத காரணத்தினால் அவையெல்லாம் முன்மொழியப்படவில்லை என்று கருதப்படுகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், உறுப்பினர்களின் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் முடிவிற்கு வைக்கப் படுகின்றன. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"1994–95 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 3–11–1994 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1994–95ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

சரியாக, 1–30 மணிக்கு முடித்துவிட்டோம்.

நிறைவேற்றப் பெற்ற 1994-95 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
A	**வருவாய்க் கணக்கில் செலவு**	
4	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்–நிருவாகம் ..	1,36
8	தேர்தல்கள் ..	1
9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	23,08
11	மாவட்ட நிருவாகம் ..	1,03,00
12	தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் ..	1,89
13	நீதி நிருவாகம் ..	5,92
15	காவல்துறை ..	9,30,72
17	கல்வி ..	3,34,05
18	மருத்துவம் ..	3,55,23
19	பொதுச் சுகாதாரம் ..	50,00
20	வேளாண்மை ..	1,69,36,11
21	மீனளம் ..	4,88,47
22	கால்நடை வளர்ப்பு ..	1,01
24	தொழில்கள் ..	17,97,72
27	ஊரக வளர்ச்சி ..	17,94
30	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் ..	8,83
32	வீட்டுவசதி ..	2,01,82
34	நுகர்பொருள் வழங்கல் ..	4,34,77
35	பாசனம் ..	4,56,41

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

A. வருவாய்க் கணக்கில் செலவு-தொடர்ச்சி.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
37	பொதுப் பணிகள்--பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் ..	2,89
38	சாலைகளும் பாலங்களும் ..	26,86
39	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் ..	2,00
42	பல்வகை ..	2,45,24
47	ஊரகத் தொழில்கள் ..	3,00,00
48	குடிநீர் வழங்கல் ..	20,29,86
49	நகராட்சி நிருவாகம் ..	2,28,50
50	சுற்றுலா ..	1,16,00
51	தமிழ் வளர்ச்சி-பண்பாடு ..	72,00
	மொத்தம் A. வருவாய்க் கணக்கில் செலவு. ..	**2,51,71,69**

B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
55	பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ..	3,50,17
56	சாலைகள்--பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ..	22,99,00
57	சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..	40,00
60	பல்வகை மூலதனச் செலவு ..	2,04,24,44
	மொத்தம் B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு ..	**2,31,13,61**

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
61 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	..	11,29,50
மொத்தம்--C. கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.	..	11,29,50
பெரு மொத்தம்	..	4,94,14,80

6. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1994 (ஆ.இ.)

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1994 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

(ஊ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS